# அக்டோபர் – 03 – செவ்வாய்

**“அவர்கள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை” லூக்.9:53**

## முதல் வாசகம்: செக்கரியா 8 : 20 - 23

படைகளின் ஆண்டவர் கூறுகிறார் மக்களினங்களும் பல நகர்களில் குடியிருப்போரும்கூட வருவார்கள்.ஒருநகரில் குடியிருப்போர் மற்றொரு நகரினரிடம் சென்று, ”நாம் ஆண்டவரது அருளை மன்றாடவும் படைகளின் ஆண்டவரை வழிபடவும், தடவும், நாடவும் விரைந்து செல்வோம், வாருங்கள் நாங்களும் வருகிறோம்” என்று சொல்வார்கள்.மக்களினங்கள் பலவும் வலிமை வாய்ந்த வேற்றினத்தாரும் படைகளின் ஆண்டவரை நாடவும் அவரது அருளை மன்றாடவும் எருசலேமுக்கு வருவார்கள்.படைகளின் ஆண்டவர் கூறுவது இதுவே ”அந்நாள்களில் ஒவ்வொரு மொழி பேசும் வேற்றினத்தாரிலும் பத்துப்பேர் மேலாடையைப் பற்றிக் கொண்டு, “கடவுள் உங்களோடு இருக்கின்றார்“ என்று நாங்கள் கேள்விப்பட்டதால் நாங்களும் உங்களோடு வருகிறோம் என்பார்கள்.”

**பதில்பாடல் :** கடவுள் நம்மோடு இருக்கிறார்

## நற்செய்தி : லூக்கா 9 : 51 - 56

அக்காலத்தில் இயேசு விண்ணேற்றம் அடையும் நாள் நெருங்கி வரவே எருசலேமை நோக்கிச் செல்லத் தீர்மானித்து,தமக்கு முன் தூதர்களை அனுப்பினார். அவருக்கு இடம் ஏற்பாடு செய்வதற்காக அவர்கள் சமாரியருடைய ஓர் ஊருக்குப் போய்ச் சேர்ந்தார்கள். அவர் எருசலேம் செல்லும் நோக்கமாயிருந்ததால் அவர்கள் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை.அவருடைய சீடர்கள் யாக்கோபும் யோவானும் இதைக் கண்டு, ”ஆண்டவரே, வானத்திலிருந்து தீ வந்து இவர்களை அழிக்குமாறு செய்யவா? இது உமக்கு விருப்பமா?” என்று கேட்டார்கள்.அவர் அவர்கள் பக்கம் திரும்பி, அவர்களைக் கடிந்து கொண்டார்.பின்பு அவர்கள் வேறோர் ஊருக்குச் சென்றார்கள்.

**தியானம்:** மனித வாழ்க்கையில் எதிர்பாராத பல திருப்பங்கள் ஏற்படுகின்றது. நாம் நினைப்பதுபோல நமது வாழ்வு அமைந்துவிடுவதில்லை. நாம் இருப்பதுபோல் நம்மை பிறர் ஏற்றுக்கொள்வதில்லை, புரிந்து கொள்வதில்லை. நாம் ஒன்று நினைக்க நடப்பது வேறொன்றாக அமைந்துவிடுகின்றது. இதனால் மனித மனம் குழப்பமடைந்து போகின்றது. பல நேரங்களில் மனித மனம் சோர்ந்து போகின்றது. கடவுளை நம்பி என்ன பயன் எனக்கு இவ்வாறு நிகழ்ந்து விட்டதே என்று அங்கலாய்த்து ஆதங்கப்படுகின்றோம். இதன் விளைவாக மனிதன் கோபத்திற்கும், சோகத்திற்கும், தனிமைக்கும், வெறுமைக்கும் ஆளாகி தன்னையே அழித்துக்கொள்ள முற்படுகின்றான். துன்பங்கள், வேதனைகள், சோதனைகள் மத்தியிலும் இறைவனுடைய திட்டம் என்ன என்பதை செபத்தில் அறிந்து ஜெருசலேம் நோக்கி பயணத்தைத் தொடர்ந்த இயேசுவைப் போல துன்பம் என்னும் சோதனை வரும் வேளையில் செபம் என்ற ஆயுதத்தை நம்முடைய கைகளில் எடுக்க வேண்டும். துன்பத்தின் நடுவில் பேசும் இறைவனின் குரலையும் அவருடைய திட்டத்தையும் அறிய இறைவார்த்தையை வாசித்து தியானிக்க வேண்டும். எரே.29:11-12 ல் வாசிப்பதைப்போல “உங்களுக்காக நான் வகுத்திருக்கும் திட்டங்கள் எனக்குத் தெரியும் அன்றோ! அவை வளமான எதிர்காலத்தையும் நம்பிக்கையையும் உங்களுக்கு அளிப்பதற்கான நல்வாழ்வின் திட்டங்களே அன்றி, கேடு விளைவிப்பதற்கான திட்டங்கள் அல்ல என்கிறார் ஆண்டவர். நீங்கள் என்னிடம் வந்து கூக்குரலிட்டு மன்றாடுவீர்கள். அப்பொழுது நான் உங்களுக்கு செவிசாய்ப்பேன்” கடவுள் நமக்காக சிறந்ததொரு திட்டத்தின்படிதான் நடத்துகின்றார் என்ற ஆழ்ந்த நம்பிக்கையில் பொறுமையோடு இறைப்பிரசன்னத்தில் காத்திருந்து செபிக்க வேண்டும். “தம்மிடம் அன்பு கொள்ளுகிறவர்களுக்கென்று கடவுள் ஏற்பாடு செய்தவை கண்ணுக்குப் புலப்படவில்லை, செவிக்கு எட்டவில்லை, மனித உள்ளமும் அறியவில்லை” 1கொரி.2:9ல் வாசிப்பது போல கடவுளை நம்பி வாழுகின்ற பிள்ளைகளுக்கு அவர் செய்யும் செயல் மிகவும் வியப்புக்குரியதாக அமையும். “கடவுள் செய்யும் ஒவ்வொன்றும் எப்போதும் நிலைத்திருக்கும் என்பதை நான் அறிவேன். அதனோடு கூட்டுவதற்கோ அதனின்று குறைப்பதற்கோ எதுவுமில்லை. தமக்கு மனிதர் அஞ்சி நடக்க வேண்டுமென்று கடவுள் எல்லாவற்றையும் செய்திருக்கின்றார்.” (ச.உ.3:14) “நாம் அடையும் இன்னல்கள் மிக எளிதில் தாங்கக் கூடியவை. அவை சிறிது காலம்தான் நீடிக்கும். ஆனால் அவை ஈடு இணையற்ற மாட்சியை விளைவிக்கின்றன. அம்மாட்சி என்றென்றும் நிலைத்திருக்கும்.